

புதுக்கோட்டை மாவட்டம், டி.வி.எஸ். கார்னர், எஸ்.எஸ். திருமண மஹாலில், கூட்டுறவுத்துறையின் சார்பில், 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் நேற்று முன்தினம்(16.11.2024) துவக்கி வைத்து, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அ.ஜீவா, மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திருமதி.தனலட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



மதுரை மாநகர் மாவட்டம் ஆரப்பாளையம் 1ம் பகுதிக்குட்பட்ட 57A, 58 வார்டுகளுக்கு உட்பட்ட பாகங்கள் 100,101,102,120 புதிய வாக்காளர் சேர்த்தல் முகாமில் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ,தளபதி எம்.எல்.ஏ. , தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணி ஹோலி ஃபேமிலி உயர்நிலைப்பள்ளிஆரப்பாளையத்தில் மதுரை மத்திய தொகுதி கழகத் தேர்தல் பார்வையாளர் விபி ராஜன், மாவட்ட அவை தலைவர் ஒச்சு பாலு ஆகியோர் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இதன் வைகை எம்,பரமன், பொதுக்குழு உறுப்பினர் ஆரப்பாளையம் பகுதி கழகச் செயலாளர் எஸ் எஸ் மாறன் , வட்டக் கழக செயலாளர் சீனி ரமேஷ், எஸ் எம் ஆர் அருண்குமார்,துரைமணி, டிஎல் பாலா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர்,எஸ் பாண்டி, கார்த்திக், எம் பாலமுருகன், பாண்டியம்மாள், ஹாப்பி இளவரசன், ராமசாமி இந்திரஜித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

# இராணிப்பேட்டை மாவட்டக் கழகத்தினர் சிறப்பாக கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்: அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, நவ,18-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைப்பெற்றது.



கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டைஆர்.காந்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது குறித்து கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்கி, சிறப்புரையாற்றினார்.

உடன் கழக சுற்றுச் சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம் எல்ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் க.சுந்தரம், அசோகன், இராணிப்பேட்டைதொகுதி பார்வையாளர்ஆதிசேஷன், அரக்கோணம் தொகுதி பார்வை யாளர் உதயசூரியன், ஆற்காடு தொகுதி பார்வையாளர் வினோத்குமார், மாவட்ட கழக துணை செயலாளர்கள் மு.சிவானந்தம் துரை மஸ்தான் , குமுதா குமார் , ஒன்றிய கழக செயலாளர்கள் பசுபதி,ஆ.சவந்தர், பாலாஜி, தெய்வசிகாமணி, பாண்டுரங்கன், நந்தகுமார், கலைச்ந்தர், பெ.வடிவேலு, ரவீந்திரன், பெருமாள், சந்திரன், கிருஷ்ணமூர்த்தி, பூர்ணசந்திரன், சண்முகம், சேஷாவெங்கட்,எஸ். அசோக், ஜெ. ரமேஷ், நகர செயலாளர்கள் டி.தில்லை, பி.பூங்காவனம்,ஏ.வி. சரவணன், கோபி, பேரூர் செயலாளர்கள் ஜனார்த்தனன், நாகராஜன், பாபு, சினிவாசன், பாஸ் என்ற நரசிம்மன், சி.பெரியசாமி, சேது ரவி,தாமோதரன், மற்றும் மாவட்ட நிர்வாகிகள், நகர, ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

அமைதியின் மறு உருவம், ஆரவாரம், ஆர்ப்பாட்டம், இல்லாத மனித நேயம் உள்ள மனிதர், முரசொலி செல்வம் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

கழகத்திற்கும் கழக தலைவருக்கும், நம் மாவட்ட கழக செயலாளருக்கும்

முத்தமிழ் அறிஞர் கலைஞருக்கு மருமகனாக இருந்தாலும் அமைதியாக வாழ்ந்தவர்.கழககொள்கையில் ஆழமானவர். பகுத்தறிவு கொள்கையில் கடைசி வரை சமரசம் செய்யாதவர் முரசொலி செல்வம் அவர்கள்.கழக நாளேடு முரசொலியில் ஆசிரியராக பணியாற்றி கழக கொள்கையை பொதுமக்கள் மற்றும் கழகத்தினரிடம் தனது எழுத்து மூலம் வெற்றிகரமாக எடுத்து சென்றவர். இதனால் தமிழ்நாடு வரலாற்றில் தினசரி நாளிதழ் எந்த ஆசிரியரும் கண்டிராத சட்டசபை கூண்டுகண்டு அஞ்சாத சிங்கம் அவர் முரசொலி செல்வம் ஆவார். தலைவருக்கும், தொண்டர்களுக்கும் பாலமாக திகழ்ந்தவர். அவரது மறைவால் தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தனது இரங்கலில்நான்சாய்ந்த கடைசி தோளும் சாய்ந்தது என்று உள்ளம் உருகினார். அப்படிப்பட்ட மாமனிதர் முரசொலி செல்வம் அவர்கள் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து மாவட்ட கழகத்தின் சார்பாக இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்துகிறது.

கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் வருகிற27ந்தேதி அன்று நடைபெற உள்ளது.

கழகத்தில் “இளைஞர் எழுச்சி நாளாக”நமது மாவட்டம் முழுவதும் கொண்டாடிட வேண்டும். கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர்களின் மத்தியில் கொள்கை பாசறை நடத்தி கழகத்திற்கு லட்சக்கணக்கான இளைஞர்களை ஈர்த்தவர். வரலாற்று சிறப்புமிக்க இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் நடத்தி வரலாறு கண்டவர்.

தற்போது தமிழ் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மாணவரிடத்தில் பேச்சு போட்டி நடத்தி, பேச்சாளராகபலரைஉருவாக்கிகொண்டிருப்பவர் உதயநிதி ஸ்டாலின் ஆவார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையில் பொறுப்பேற்று இந்தியாவிலே தமிழ்நாடு விளையாட்டு துறையில் முதன்மை பெற செய்தவர். தற்போது துணை முதல்வராக, தமிழ்நாட்டை வழிநடத்த இருப்பவர் உதயநிதி ஸ்டாலின் ஆவார்.

தற்போது தமிழ்நாடு முதல்வராக பொறுப்பேற்று தமிழ் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஆய்வு மேற்கொண்டு கழக அரசின் நல திட்டங்கள் பொதுமக்களுக்கு சென்றடையும் வகையில் சிறப்பாக ஆய்வு செய்து பணியாற்றி அனைத்து மக்களிடத்திலும் நன்மதிப்பை பெற்று கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் , கழகத்திற்கும் பெருமை பெற்று தருபவர் உதயநிதி ஸ்டாலின் ஆவார்.

எனவே அவரது பிறந்த நாளை நமது மாவட்டம் முழுவதும் நகர, ஒன்றிய, பேரூர், ஊர்கிளை தோறும் கழக கொடி ஏற்று விழா, பொதுக் கூட்டங்கள், நலத் திட்ட உதவிகள், வழங்கும் விழா பள்ளி மாணவ மாணவியருக்கு இலவச நோட்டு புத்தகங்கள் வழங்குதல், இனிப்பு வழங்குதல் அன்னதானம் ,ரத்த தானம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தி நமது மாவட்டம் முழுவதும் சிறப்பாக நடத்துவது என தீர்மானிக்கப் பட்டது.

தமிழ்நாடு தேர்தல் ஆணையம் 23,24, சனி ஞாயிறு ஆகிய நாட்களில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.இந்த முகாமில் ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் கழக தோழர்களை ஈடுபடுத்தி வாக்காளர் பட்டியல் சரி பார்த்து, சேர்த்தல், நீக்கல் ஆகிய பணிகளில் தீவிரமாக செயல்படுவதென தீர்மானிக்கப்படுகிறது.நமது மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளுக்கு தொகுதி பார்வையாளராக தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டு வருகை தந்துள்ளனர் .

அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி அவரது ஆலோசனைப்படி அனைத்து கூட்டங்களையும் நடத்தி வருகிற 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் மீண்டும் கழக ஆட்சி பொறுப்பேற்று தமிழ்நாடு முதல்வராக தளபதி அவர்கள் திகழ அரும்பாடு பட்டு கழக தலைவர் தளபதி அவர்களின் எண்ணத்தை ஈடு ஏற்றுகின்ற வகையில் 200 சட்டமன்ற தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறவும் நமது மாவட்டத்தில் நான்கு தொகுதிகளிலும் திமுக கழகம் வெற்றி பெற அயராது பாடுபட்டு தமிழ் நாட்டில் சரித்திரம் படைக்கின்ற வகையில் திராவிட மாடல் ஆட்சி செய்கிற கழகத் தலைவர் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்குவதென ஏகமனதாக தீர்மானிக்கப் படுகிறது

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பம்மல் பேரூராட்சி முன்னாள் தலைவர்

# கழக முன்னோடி பம்மல் மா.சூரன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை நவ:18

காஞ்சிபுரம் மாவட்டம், பம்மல் பகுதியில் திராவிட முன்னேற்றக் கழக பேரியக்கத்திற்காக கழகம் அறிவிக்கும் ஆர்ப்பாட்டம்,மாநாடு என அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறு வயதிலிருந்து வேகமும் விவேகத்துடன் பணியாற்றிய முன்னாள் பேரூராட்சி துணை செயலாளர்,முன்னாள் பம்மல் பேரூராட்சி செயலாளர்,முன்னாள் பம்மல் பேரூராட்சி தலைவர், முன்னாள் பம்மல் நகர



கழக அவைத் தலைவர் என பல பதவிகளை வகித்த கழக முன்னோடி பம்மல் மா.சூரன் அவர்கள் நேற்று 17.11.2024 இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைந்த கழக முன்னோடி பம்மல் மா.சூரன் அவர்களின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரது இறுதி ஊர் வலம் இன்று (திங்கள் 18.11.2024) மாலை 3.00 மணிக்கு முனுஆதி தெரு, பம்மல் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.





வேலூர் மாநகரம் 41வது வார்டு உட்பட்ட அம்பேத்கர் நகர் பெரிய லைன் பகுதி மக்களின் புதிய கழிப்பிட கட்டிடம் கோரிக்கை ஏற்று ரூ.29.00 லட்சம் மதிப்பீட்டில் நவீன வசதியுடன் கூடிய புதிய கழிப்பிட கட்டிடத்தை வேலூர் சட்டமன்ற உறுப்பினரும் மாநகரகழக செயலாளருமான ப.கார்த்திகேயன் திறந்து வைத்தார். உடன் பொதுக்குழு உறுப்பினர் மா.ப.அன்புநிதி, பகுதி செயலாளர்கள் தி.அ.முனவர் பாஷா, பி. முருகப்பெருமாள் ,வீ.ஜி.கே. சுந்தர் விஜி முரளி கிருஷ்ணன் எம்.மாணிக்கவாசகம் எஸ்.கிருஷ்ணமூர்த்தி கே.அஸ்லாம்கான், எம்.தேவராஜ், டி.அசோக் குமார், நவீன் குமார், வடிவேல், ராஜேஷ், நிஜாமுதீன் மற்றும் அம்பேத்கர் நற்பணி இயக்க தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பிரதமர் மோடி அடிக்கடி நினைவை இழந்து வருகிறார்!

## ராகுல் காந்தி விமர்சனம்!

மும்பை,நவ.18–

பிரதமர் நரேந்திர மோடி நினைவை இழந்து வருவதாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பேசியுள்ளார்.

மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தல் வருகிற நவம்பர் 20 அன்று நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து, தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அமராவதி நகரில் பேசிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தி, மாநில அரசுகளின் வேட்பாளர்களை காசு கொடுத்து வாங்கி அரசைக் கவிழ்ப்பதற்கும், பெரும் தொழிலதிபர்களின் 16 லட்சம் கோடி கடனைத் தள்ளுபடி செய்வதற்கும் மத்திய அரசுக்கு உரிமை இருப்பதாக அரசியல் சட்டத்தின் எந்த இடத்திலும் எழுதப்படவில்லை.

அரசியலமைப்பை நாட்டின் மரபணுவாக காங்கிரஸ் கருதுகிறது. ஆனால், ஆளும் பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு அது வெற்றுப் புத்தகம் மட்டுமே.



சமீப காலங்களில் நான் எழுப்பும் அதே பிரச்சினையைப் பற்றி பிரதமர் நரேந்திர மோடி பேசுகிறார் என்று என் சகோதரி என்னிடம் கூறினார். மக்களவையில் அவரிடம், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி, இடஒதுக்கீடு மீதான 50 சதவீத உச்சவரம்பை நீக்க வேண்டும் என்று கூறினேன். இப்போது அவர் தனது தேர்தல் கூட்டங்களில் நான் இடஒதுக்கீட்டுக்கு எதிரானவன் என்று கூறுகிறார். முன்னாள் அமெரிக்க அதிபரைப் போல பிரதமர் மோடி நினைவை இழந்து வருகிறார். அடுத்து, ராகுல் காந்தி சாதிவாரி கணக்கெடுப்புக்கு எதிரானவன் என்றும் அவர் கூறுவார் என்று தெரிவித்தார்.

மேலும் பேசிய அவர், ”ஜிஎஸ்டி மற்றும் பணமதிப்பு நீக்கம் ஆகியவை விவசாயிகளையும் சிறு வணிகர்களையும் கொல்லும் ஆயுதங்கள். நாட்டில் வேலையின்மை அதிகரித்து வருகிறது, அதனால் தான் சமூகத்தில் வெறுப்பு பரவுகிறது. மோடி அரசு இருக்கும்வரை புதிய வேலை வாய்ப்புகள் உருவாகாது.

நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் பணவீக்கம் கட்டுப்பாட்டை மீறுகிறது. ஏழைகள் தங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்க முடியாது. அதே நேரத்தில் தொழிலதிபர்களின் வீட்டுத் திருமணங்களில் கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்படுகிறது.

தொழிலதிபர்கள் உங்களை பிரதமராக தேர்வு செய்யவில்லை, இந்திய மக்களே உங்களைத் தேர்ந்தெடுத்தனர் என்று மோடியிடம் நான் சொல்ல விரும்புகிறேன். தொழிலதிபர்கள் அவரை சந்தைப்படுத்தினார்கள் என்பதே உண்மை என்றார்.

மும்பையில் தாராவி மறுசீரமைப்பு திட்டம் குறித்து பேசிய ராகுல் காந்தி, ”தாராவியில் பத்து பணக்காரர்கள் மட்டும் வாழ்ந்திருந்தால் அங்குள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்காது. பணக்காரர்களின் நிலம் பறிக்கப்பட்டதாகக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? ஏழைகள் மற்றும் விவசாயிகளின் நிலத்தை மட்டும் ஏன் கையகப்படுத்த வேண்டும்? அவை அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளதா? என்று கேள்வி எழுப்பினார்.

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்!

# தென்காசியில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

## வே.ஜெயபாலன் – ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தென்காசி.நவ.18.

தென்காசியில் 71 வது அனைத்தி ந்திய கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு மாவட்ட அளவிலான கூட்டுறவு வார விழா இலஞ்சி ஸ்ரீ சாரதாம்பா கிராண்டில் மாவட்ட ஆட்சிய ஏ.கே. கமல் கிஷோர் தலைமையில் தென்காசி மக்களவை உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கு.நரசிம்மன் வரவேற்புரையாற்றினார்

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று கொரோனா தொற்று மூலம் உயிரிழந்த நியாய விலைக் கடை விற்பனையாளர் குடும்பத்திற்கு முதல மைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 25 லட்சத்திற்கான காசோலை மற்றும் 3103 பயனாளிகளுக்கு ரூபாய் 31.72 கோடி மதிப்பிலான பயிர் கடன், கால்நடை பராமரிப்பு கடன், கைம்பெண் கடன், டாம்கோ, மகளிர் சுய உதவி குழு கடன்,பெண்கள் தொழில் முனைவோர் கடன்களை வழங்கியும்,வருவாய்த் துறையின் மூலம் 1072 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களையும்,சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள்,பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கி தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு அறிவித்த 5 சவரனுக் குட்பட்ட பொது நகைக்கடன்கள் தள்ளுபடி மூலம் 28,420 குடும்பங்கள் ரூ.136 கோடி அளவில் பயனடைந்துள்ளனர். மேலும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி மூலம் தென்காசி மாவட்டத்தில் உள்ள 1,637 மகளிர் சுய உதவிக்குழுக்களின் 16,815 மகளிர் உறுப்பினர்கள் ரூ.48.47 கோடி அளவில் பயனடைந்து ள்ளனர்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெய்த வடகிழக்கு பருவ கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.1000 வீதம் ரொக்கமாக வழங்கப்படும்.என முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில் தென்காசி மாவட்டத்தில் உள்ள 3,13,049 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.31.30 கோடி வெள்ள நிவாரணம் கூட்டுறவுத் துறையின் மூலம் செயல்படும் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.மேலும் தென்காசி மாவட்டத்தில் செயல்படும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் 2023 2024ஆம் ஆண்டில் 29,693 விவசாயிகளுக்கு ரூ.303.44 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் அக்டோபர் மாதம் வரை 9,116 விவசாயிகளுக்கு 104 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் மக்களை நேரில் சந்தித்து அவர்கள் கோரிக்கைகளை கேட்டு தெரிந்து செய்து கொடுக்க அமைச்சர்களுக்கு மட்டுமல்ல எம்.பி.,எம்.எல்.ஏ.க்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர்களுக்கும் உத்தரவிட்டுள் ளார்கள்.கூட்டுறவு சங்கத்தின் மூலம் கடன்கள் அவரவர்கள் தகுதிக்கு ஏற்ப வாரி வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சி விவசாயிகளின் சிரமத்தை புரிந்து கொண்டு இந்த ஆட்சி நடைபெறுகிறது. தொடர்ந்து கடன் வழங்கும் வேலையை கூட்டுறவு சங்கங்கள் செய்து வருகிறது.

கூட்டுறவு சங்கங்கள் மேலும் மேலும் வளர வேண்டும். கூட்டுறவுத் துறை அதிகாரிகள் அனைவரும் முதலமைச்சர் அவர்களின் அதிகாரிகள் ஆவார்கள்.

திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். நம்முடைய ஆட்சி, உங்களுடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.விரைவில் நெல்லையிலிருந்து தென்காசிக்கு மத்திய கூட்டுறவு வங்கி கொண்டு வரப்படும்.நாங்கள் தளபதி அவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர்கள்.உங்களுக்காக உழைக்க காத்துக் கொண்டிருக் கிறோம்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் முன்னிலையில் கூட்டுறவு சங்கங்களின் அலுவலர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்களும் கூட்டுறவு வார விழா உறுதிமொழி யினை ஏற்றுக்கொண்டனர்.

மேலும் கூட்டுறவுத் துறையின் மூலம் கூட்டுறவு சங்கத்தில் பணிபுரியும் போது உயிரிழந்தவரின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணையினையும் அமைச்சர் கே.கே. எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், துணைப்பதிவாளர் செல்வி.பா. பூர்விசா, இணைப்பதிவாளர் / செயலாட்சியர் மா. உமா மகேஸ்வரி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் உதயகிருஷ்ணன், இலஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் ச.சின்னத்தாய், துணைத்தலைவர் மு.முத்தையா,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லதுரை, ஆறுமுகச்சாமி,சேக்தாவுது, பொதுக்குழு உறுப்பினர் ரகீம்,நகர் மன்ற துணைத் தலைவர் சுப்பையா, ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், ஜெயக்குமார், திவான் ஒலி, ரவிசங்கர், சுரேஷ், நகரச் செயலாளர் கள் சாதிர், வெங்கடேசன்,அப்பாஸ், கணேசன்,பேரூர் செயலாளர்கள் குட்டி, சுடலை, அணி அமைப்பாளர்கள் கிருஷ்ண ராஜா, ரமேஷ், கருப்பணன், துணை அமைப்பாளர்கள் அப்துல் ரஹீம்,கரிசல் வேலுச்சாமி, ஐவேந்திரன் தினேஷ்,சுரேஷ், சுப்பிரமணியன், அண்ணாமலை, ராமராஜன் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், கூட்டுறவுச்சங்க பணியாளர்கள், அரசு அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



அம்பத்தூர் 89வது வட்டத்தில், வாக்காளர் பட்டியலில் புதிய பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் செய்தல், முகாமை அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர். ஜோசப் சாமுவேல், 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி, தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால், (அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளர் பி. முனியாண்டி, 89வது வட்டக் கழக செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம். இ. சேகர் ஆகியோர் 89வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நடைபெற்ற வாக்காளர் முகாமை நேரில் ஆய்வு செய்தனர். இம்முகாமில் வார்டுக்கு உட்பட்ட அனைத்து பாகங்களிலும் உள்ள BLA 2 பாக நிலை முகவர்கள், BLC முகவர்கள், கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.